1973 ஆகஸ்ட் 14]

அடுத்து, ஐ.சி.ஏ.ஆர். உதவி என்பது வேறு. உலக வங்கி உதவி என்பது வேறு.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்விக்கு சரியான பதில் கிடைக்கவில்லை.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் மற்றொரு கால்நடைக் கல்லூரியை ஆரம்பிக்கும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே இருப்பதைத் தவிர புதிதாக நாம் கேட்டிருப்பது **facilities for reinforcing existing colleges and research stations and starting new ones.** அனிமல் ஹஸ்பன்டரி—கால்நடைக் கல்லூரி தனியாகத் தொடங்கவேண்டுமென்று நாம் கேட்கவில்லை. கல்லூரி தொடங்கவேண்டுமென்பது உலக வங்கியின் திட்டம் அல்ல. அது ஐ.சி.ஏ.ஆர். திட்டம்தான்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நாம் வேளாண்மைத் துறையிலே முன்னேற்றம் அடைந்திருந்தாலும், அன்னியச் செலவாணியை ஈட்டித் தருகின்ற மஞ்சள் போன்ற பயிர்களுக்கு என்ன உரம் போட வேண்டும் ; எந்த மாதத்தில் பயிரிட வேண்டும் ; நோய் வந்தால் என்ன மருந்து தெளிக்க வேண்டும் என்பவற்றிற்கு இன்னும் சரியான ஆராய்ச்சி நடைபெறவில்லை. ஆகவே, உலக வங்கி அளிக்கும் நிதி உதவியிலிருந்து இப்படிப்பட்ட காரியங்களுக்கும் செலவு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த மஞ்சள் பயிர் மட்டுமல்ல. வேறு பல பயிர்களும் இருக்கின்றன. இஞ்சி இருக்கிறது ; டாப்பியாக்கோ இருக்கிறது. இவைகளை ஏற்றுமதி செய்ய முடியும். அவைகளுக்கான ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. மஞ்சளைப் பற்றிய குறிப்பு என்னிடம் தற்போது இல்லை.

Chick Hatchery at Kappalur

* 142 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the expansion schemes of the Chick Hatchery at Kappalur in Madurai district?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பேரவைமுன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : விவர அறிக்கையில் இந்த நிலையை மேலும் விரிவுபடுத்த செயற்குறிப்பு இருக்கிறது. இந்த விரிவுபடுத்துகின்ற முறை எப்போது அமலுக்கு வரும்? செலவுத் தொகை எவ்வளவு?

@ 389—390ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கோழி வளர்ச்சியில் முன்பு ஏராளமாக நட்டம் வந்தது. இனி, கோழி வளர்ச்சி என்பது லாபத்தில் நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தில்தான் பவுல்ட்ரி டெவெலப் மெண்டு கார்ப்பரேஷன் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக் கிறது.

திரு. சோ. அழகர்சாமி: கப்பலூரில் உள்ள குஞ்சு பொரிக்கும் நிலையத்தை விரிவுபடுத்துவதாகக் கூறியிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத் தில் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பல காரியங்கள் நடந்து வருகின்றன. இவர்களுக்குத் தனியார் பண்ணையில் இருந்து அதிக விலைக்குக் குஞ்சுகளை வாங்கித் தருகிறார்கள். 20 ரூபாய் கூட ஆகிறது. ஆகவே கப்பலூர், அபிஷேக பட்டினம், ஹோசூர் போன்ற பகுதிகளில் இருந்து குறைந்த விலைக்குக் குஞ்சுகளை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நெல்லை மாவட்டத்தில் பவுல்ட்ரி டெவலெப்மெண்டு கார்ப்பரேஷன் இல்லை. S.F.D.A. இன் கீழ் சிறு விவசாயிகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி செய்யப்படுகிறது. தனியார் பண்ணையில் குஞ்சுகள் நன்றாக இருந்தால் விலை அதிகத்தைக் கூடப் பார்க்காது வாங்கி அளிக்கப்படுகிறது. அரசு தயாரிப்பு போதுமான தாக இல்லாத காரணத்தினால் அவை வழங்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: கப்பலூர் கோழிப்பண்ணையானது ஏற்கனவே மூடப்பட்டு இப்போது திறந்திருக்கிறார்கள். அதிலே 2 இன்கு பேட்டர்கள் 2,600 அளவில் இணைக்கப்பட்டிருக்கிறது. மாதந்தோறும் எத்தனை குஞ்சுகள் பொரிக்கப்படுகின்றன? இங்கே குஞ்சாக விற்கப்படு கிறதா? முட்டையாக விற்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: குஞ்சுகளும் விற்கப்படுகின்றன, முட்டைகளும் விற்கப்படுகின்றன. எத்தனை என்கிற விவரம் என் கைவசம் இல்லை. இதுவரை கப்பலூர் பண்ணையில் நட்டத்தைத் தவிர வேறு இல்லை. இனி லாபத்தோடு நடத்த முடியவில்லை என்றால், மூடுவதைத் தவிர வேறு வழியில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏற்கனவே அந்தத் துறையோடு தொடர்பு கொண்டிருந்தவன் என்ற முறையில் ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். கோழி வளர்ப்புக்கு வேண்டிய உதவிகளை அளிக்கக்கூடிய பண்ணையாக அது இருக்கும். அது லாபத்திற்காக மட்டும் நடத்தப்படுவது அல்ல. தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பதற்காகவும் நடை பெறுகிறது. இதுபோல தமிழ்நாட்டில் ஹோசூரில் ஒரு பண்ணையும், சென்னைக்குப் பக்கத்தில் ஓரிடத்திலும் நடைபெறுகின்றன.

MR. SPEAKER: Question 143 . . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I had been trying to catch your eye for the past ten minutes and I had been

lifting my hand. Why should you deprive us of this opportunity? . . . . .

MR. SPEAKER : Next question 143.

நகராட்சிகள் திரைப்பட அரங்குகள் நிறுவுதல்.

*143 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள நகராட்சி, மாநகராட்சி மன்றங்கள், சினிமா தியேட்டர் கட்ட, எவை எவை அரசிடம் அனுமதி கேட்டுள்ளன?

(இ) அதன்மேல் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தஞ்சை, தர்மபுரி, மேட்டுப்பாளையம் நகர மன்றங்கள், திரைப்பட அரங்குகள் கட்டுவதற்கான அனுமதி கேட்டுள்ளன.

(இ) பயன் தரும் தொழில்களில் ஒன்றாகத் திரைப்பட அரங்குகளை மூன்று நகராட்சிகளும் கட்டிக்கொள்வதற்குத் தடையேதும் இல்லையென்றும், கட்டப்படும் திரைப்பட அரங்குகள பயன் (ஆதாயம்) தருவதாகவும், விதி முறைகளுக்கு ஒப்பானதாகவும் இருக்க வேண்டும் என்று அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது. அவற்றைக் கட்டுவதற்கு முன், அரசிடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. கு. காமாட்சி : திருச்சி நகர மன்றத்தின் சார்பில் இப்போ திருக்கிற தேவர் மன்றத்தை நாடக அரங்கமாகவும், சினிமா அரங்கமா கவும் மாற்றவேண்டும் என்பதற்கு அனுமதி கோரி அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி எந்தவிதமான தகவலும் இல்லை.

திரு. எ. சி. நரசிம்மன் : சினிமாக் கொட்டகை கட்ட கடனாக உதவித் தொகை கொடுக்கப்படுகிறது என்றார்கள். ஜனத்தொகை அடிப்படையில் 10 ஆயிரம் பேருக்கு ஒரு சினிமாக் கொட்டகை என்கிற விதி இருக் கின்றது. நகராட்சி மன்றங்களைப் பொருத்த வரையிலாவது அந்த விதியைத் தளர்த்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.